மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நண்டலாற்றின் வரலாற்றையே இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அரசிடத்தில் புள்ளி விவரங்கள் இல்லை. எனினும், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஏதேனும் அத்தகைய பணிகள் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இருப்பின் அவை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முடிகொண்டான் ஆற்றில் ரெகுலேட்டர் அமைத்தல்.

698—(*வினா எண். 4573.) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் வட்டம் முடிகொண்டான் ஆற்றில் சன்னாநல்லூர் அருகில் ரெகுலேட்டர் அமைத்து நெடுஞ்சேரியிலிருந்து குனாண்டிதரிசி வெளி வரை பாசன வசதியைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நசுவினியாற்றை ஆழப்படுத்தல்.

699—(*வினா எண். 8910) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில், நசுவினியாறு, கடலில் கலக்கும் இடம் சுமார் 2 கி. மீட்டர் தூரத்தில் வளர்ந்துள்ள காடுகளை அகற்றி, ஆற்றை ஆழப்படுத்திட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் நசுவினியாறு கடலில் கலக்கும் இடத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் வரையில் உள்ள பகுதிகளில் ஆற்றைச் சுற்றிலும் காடுகள்